# இயல் 3.3 - தப்பிப் பிழைத்த மான்

1. **தப்பிப் பிழைத்த மான் என்ற கதையை உன் சொந்த நடையில் சுருக்கி எழுதுக.**

காகமும் மானும் இணைபிரியா நண்பர்கள், கொழுகொழுவென இருக்கும் மானை எப்படியாவது கொன்று தின்றுவிட வேண்டும் என எண்ணி நரி, காகத்திடமிருந்து மானைப் பிரிக்க எண்ணியது.

நரி தன்னை நண்பனாக ஏற்றுக்கொண்ட மானிடம் “நண்பா, யாரையும் நம்பி விடாதே! அது நமக்கு ஆபத்து.” என்று காகம் கூறியது. மேலும் “கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்றது.

நண்பனாக மாறிய நரி, மானைக் கொன்று தின்பதற்கு திட்டம் தீட்டியது. நரி விவசாயி ஒருவரின் விளைச்சல் நிலத்திற்கு மானை அழைத்துச் சென்றது மேயவிட்டது. மான் விவசாயி வருவதைக் கண்டதால் தப்பிப்பதற்காக ஓடும் போது கம்பிவேலியில் சிக்கிக் கொண்டது. நரி கரும்பு வயலில் மறைந்து கொண்டு இருந்தது.

ஆனால் காகம் அவ்விடத்திற்கு வந்து மானிடம், விவசாயி அருகில் வரும் வரை நீ இறந்ததுபோல் அசையாமல் இரு விவசாயி உன்னை வேலியிலிருந்து விடுவித்தவுடன், நான் மரத்திலிருந்து கா கா கா என்று குரல் கொடுக்கிறேன், உடனே தப்பித்து விடு என்றது. அதன் படி மான் நடித்தது. விவசாயி விடுவித்தவுடன் காகம் கா கா எனக் கரைய மான் ஓடியது.

இக்கதையின் மூலம் ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் என்பதை அறியலாம்.